Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 13, 2025

வியாழக்கிழமை 13, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 178 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

## வெள்ளி முதல் விடுமுறை




2025ஆம் ஆண்டில் அரசுப் பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான விடுமுறை தொடர்பில் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



### பெண் வைத்தியர் துஷ்பிரயோகம்:

# 'பண்டி' கைது

- சிறிது காலம் காவி உடை அணிந்திருந்தவர்
- சிக்னல் நிறுத்தப்பட்டதால் சீக்கிரம் சிக்கினார்
- நீதவான் அதிரடி உத்தரவு

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் நிபுணராக பயிற்சி பெற்று வந்த 32 வயதான பெண் மருத்துவரை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் திங்கட்கிழமை (10) மாலை வேளையில் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபர், புதன்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், கல்னேவ நவநகரப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவர், 'பன்டி' என்றழைக்கப்பட்ட நிலந்த என்ற பெயரில் இருந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர், போதைப்பொருள் சம்பவம் தொடர்பாகத் தடுப்புக் காவலில் இருந்து, ஞாயிற்றுக்கிழமை(09) விடுவிக்கப்பட்டவர் என்று பொலிஸார் கூறுகின்றனர். சந்தேக நபர் சிறிது காலமாக காவியுடை அணிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பெண் வைத்தியர் பணிபுரிந்த வார்டில் திங்கட்கிழமை (10) மாலை 6.30 மணி முதல் 7.00 மணி வரை, தனது கடமைகளை முடித்துவிட்டு, சம்பந்தப்பட்ட போதனா வைத்தியசாலைக்கு எதிரே உள்ள மருத்துவ விடுதியில் உள்ள தனது அறைக்குச் சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2



**அரோகரா...**

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த பஞ்ச ரத பவனி, புதன்கிழமை (12) காலை முதல் வெகு விமர்சையாக இடம்பெற்றது. நாடளாவிய ரீதியில் இருந்து மட்டுமன்றி, கடல் கடந்த நாடுகளில் இருந்தும் வருகைதந்திருந்த பெருந்திரளான பக்தர்கள், காவடி எடுத்து, அரோகரா... அரோகரா... என கூறி, பஞ்ச ரதங்களின் வடங்களைப் பிடித்து தேர்களை இழுத்து பக்தி பரவசத்துடன் இருந்தனர். (மேலதிக படங்கள் 5ஆம் பக்கம்)

## வைத்தியசாலைகள் ஸ்தம்பிதம்



அனுராதபுரம் மருத்துவமனையில் பெண் மருத்துவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்தில் தொடர்புடைய நபரை உடனடியாக கைது செய்யக் கோரி அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம், புதன்கிழமை (12) வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தது.

இதனால், நாடு முழுவதும் உள்ள பல மருத்துவமனைகளில் வெளி நோயாளர் பிரிவுகள் மற்றும் மருத்துவமனைகள் முற்றிலுமாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. கொழும்பு தேசிய மருத்துவமனையிலும் வெளி நோயாளர் பிரிவுகள் மற்றும் மருத்துவமனைகள் ஸ்தம்பிதமடைந்திருப்பதையும் காண முடிந்தது.

## "குரங்குகளை எண்ணுங்கள்"



எதிர்வரும் 15ஆம் திகதி காலையில் முன்னெடுக்கவுள்ள குரங்குகள், மர அணில்களை எண்ணும் பணி வெற்றியளிக்க அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும், தாமும் முடிந்தால் அவற்றை எண்ணிக் கூறுகின்றோம் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சிறிகொத்தாவில் ராஜிதவுக்கு எதிர்ப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு, கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க தலைமையில், புதன்கிழமை (12) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## மூவரின் செலவுகள் அம்பலமானது

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் குழுக்களின் பிரதி தலைவர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் அதற்கான எரிபொருள் செலவுகள் தொடர்பில் பாராளுமன்ற நிதிப் பணிப்பாளர் அத்தாட்சிப்படுத்திய ஆவணங்களை சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க சபைக்கு சமர்ப்பித்தார்.

தொடர்ச்சி P2



## வீட்டில் இருந்து ஒருவர் விலகினார்



### ஏழுத்து மூலம் அறிவித்தும் இன்று வரை சம்பந்தப்பட்ட ஏவரிடம் இருந்தும் ஏவ்வித பதிலும் கிடைக்காமல் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளேன்

வ.சக்தி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சி.காண்டீபன் அக்கட்சியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்து கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

சி.காண்டீபன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை, எருவில் வட்டாரம். எனும் விபரம் உடைய நான் தங்கள் மேலான கவனத்திற்கு அறியத்தருவது யாதெனில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரும் எருவில் வட்டார தமிழரசு கட்சியின் வட்டார கிளைக் குழு தலைவராகவும் பிரதேச கிளை உறுப்பினராகவும் பதவி வகித்து வருகின்றேன்.

கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலில் எருவில் வட்டாரத்தில் போட்டியிட்டு அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 வீதத்துக்கும் அதிகமான மக்கள் ஆணையைப் பெற்று சிறந்த முறையில் மக்களுக்கு சேவையாற்றி கட்சி வளர்ச்சிக்காகவும் செயற்பட்டேன்.

தொடர்ச்சி P2

## வீணையில் ஈ.பி.டி.பி. தனித்துப் போட்டி

நிதர்ஷன் வினோத்

நாட்டில் நடைபெற உள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) வீணைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட உள்ளதாக அக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் தெரிவித்துள்ளார்

யாழ். ஊடக அமையத்தில் புதன்கிழமை(12) நடைபெற்ற வாராந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## சாகலவின் வீட்டில் தேசபந்து?



நீதிமன்றத்தால் திறந்த பிடியாணை பிறப்பித்து கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், மாத்தறை மொரவக்கவில் உள்ள முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் வீட்டில்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# பெண் வைத்தியர் துஷ்பிரயோகம்: ‘பண்டி’ கைது

வைத்தியர் தனது விடுதி அறையின் கதவைத் திறந்து உள்ளே நுழைய முயன்ற போது, கூர்மையான கத்தியுடன் அவர் பின்னால் சென்ற சந்தேக நபர், திடீரென பெண் வைத்தியரை அறைக்குள் தள்ளி, கூர்மையான கத்தியைக் காட்டி மிரட்டி, கதவை மூடியுள்ளார். பின்னர் அவர், அந்தப் பெண்ணை படுக்கையறைக்குள் இழுத்துச் சென்று, கைகளையும் கால்களையும் கட்டியதுடன், பேச முடியாத வகையில், வாயையும் இறுக்கக் கட்டி வைத்து, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இது தொடர்பாக, அந்த பெண் வைத்தியர் அனுராதபுரம் வைத்தியசாலையில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவத்திற்குப் பிறகு, சந்தேக நபர் தப்பி ஓடிவிட்டார். கட்டப்பட்டிருந்த கை, கால்களை அவிழ்க்கக் கடுமையாகப் போராடிய பெண் வைத்தியர், அவற்றை ஒருவாறு அவிழ்த்துக் கொண்டு உடலைக் கழுவி விட்டு, தான் பணியாற்றிய வார்ட்டுக்கு திரும்பி, தனக்கு நேர்ந்ததை தொலைபேசியூடாக தனது தந்தைக்கு அறிவித்துவிட்டு, 10 ஆம் திகதி இரவு 11.00 மணியளவில் சம்பவம் தொடர்பாக அனுராதபுரம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

இராணுவ சேவையில் இருந்து தப்பியோடியவர் என்று கூறப்படும் சந்தேக நபர், மருத்துவரை பாலியல் வன்புணர்வு செய்து, பின்னர் பெண் வைத்தியரின் இரண்டு அலைபேசிகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

திருடப்பட்ட தொலைபேசியின் இருப்பிடம் குறித்து கிடைத்த தகவலின் அடிப்படையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். இந்தத் தகவல்களைத் தொடர்ந்து, கல்னேவ பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

அவுகானா ரயில் நிலையம் அருகே தொலைபேசி சிக்னல் நிறுத்தப்பட்டதால், சந்தேக நபர் இந்தப் பகுதியில் மறைந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்ததால், பொலிஸார் அந்தப் பகுதியில் தேடுதல் வேட்டையைத் தொடங்கியுள்ளனர்.

அதன்படி, கல்னேவ பொலிஸ் சிறப்புக் குழு, கல்னேவ, ஹெலபொடுகம பகுதியில் மறைந்திருந்த போது சந்தேக நபரைக் கைது செய்துள்ளது.

அனுராதபுரம் மருத்துவமனையில் பெண் மருத்துவரைத் துஷ்பிரயோகம் செய்த சந்தேக நபரை உடனடியாக நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறு அனுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜெயசூரிய, அனுராதபுரம் தலைமை பொலிஸ் ஆய்வாளர் ஆர்.என்.கே. ஜெயவீரவுக்கு, புதன்கிழமை (12) மாலை உத்தரவிட்டார்.

மருத்துவரிடமிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் அலைபேசியில் இருந்து எடுக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட அழைப்புகளின் பதிவை வழங்குமாறு டயலொக் நிறுவனத்துக்கு நீதவான் உத்தரவிட்டார்.

பொலிஸார் “பி” அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் உண்மைகளைச் சமர்ப்பித்ததை அடுத்து, நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

# “குரங்குகளை எண்ணுங்கள்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (12) நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

2005ஆம் ஆண்டில் ஒரு கிலோ கிராம் நெல் 8 ரூபாவுக்கே இருந்தது. ஆனால் அன்று அந்த விவசாயிகளுக்குக் கௌரவத்தையும் சிறந்த வருமானத்தையும் கொடுப்பதற்காக அரசாங்கம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. இதன்போது அரிசியில் தன்னிறைவடையும் நிலைக்கு சென்றது என்றார்.

நெல் களஞ்சியத்திற்கு இருப்பிடம் இன்றி மத்தள விமான நிலையத்தையும் களஞ்சியமாக மாற்றும் நிலைமையும் காணப்பட்டது. இந்த அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்த போது, விவசாயிகளுக்காக போராட்டங்களை நடத்தியது. அப்போது வழங்கிய வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் செயற்படுத்தும் என்று நினைக்கின்றோம். இதன்படி நெல்லுக்கு நியாயமான விலையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றோம் என்றார்.

# வீட்டில் இருந்து ஒருவர் விலகினார்

எனக்கு இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தகுந்த காரணங்கள் ஏதுமின்றி மாற்றுக் கட்சியில் இருந்து தமிழரசுக் கட்சியில் இணைந்த களுவாஞ்சிகுடி வட்டார வேட்பாளரை தவிசாளர் ஆக்குவதற்கு நான் இடையூறாக இருப்பேன் என்ற ஒரே காரணத்துக்காகக் கட்சியின் ஜனநாயகப் பண்புகளுக்கு முரணாக எனக்கு வேட்பாளராக இடம் தராமல் புறக்கணிக்கப்பட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டேன்.

இது சம்பந்தமாகக் கட்சியின் முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் அச்சமயம் எழுத்து மூலம் அறிவித்தும் இன்று வரை சம்பந்தப்பட்ட எவரிடம் இருந்தும் எவ்வித பதிலும் கிடைக்காமல் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளேன்.

அந்த வகையில், அரசியல் நடைமுறைக்கு மாறாகவும் ஜனநாயகப் பண்புகளுக்கு முரணாகவும் கட்சி செயற்பட்டுள்ளதாலும் கட்சிக்குள் காணப்படும் உட்கட்சி முரண்பாடுகளால் மக்கள் மத்தியில் கட்சியின் செல்வாக்கு குறைந்துள்ளதுடன் மக்கள் கட்சியில் அதிருப்தி அடைந்துள்ளதாலும், இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால அங்கத்துவத்தில் இருந்தும் கட்சியில் நான் வகித்து வரும் சகல பதவிகளிலிருந்து மிகுந்த மனவேதனையுடன் எனது சுயவிருப்பின் பேரில் ராஜினாமா செய்கின்றேன். என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிற்றுண்டி சாலை நடத்துனருக்கு கடூழிய சிறை

பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு - கரடியனாறு பாடசாலை சிற்றுண்டிச் சாலை நடத்துநருக்கு இரண்டு மாத கால கடூழிய சிறைத் தண்டனையும் 20 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம் புதன்கிழமை (12) உத்தரவு பிறப்பித்தது.

செங்கலடி சுகாதார வைத்திய அலுவலக அதிகாரிகளினால் தாக்குதல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையானது ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சிற்றுண்டிச் சாலை நடத்துநருக்கு இரண்டு மாத கால கடூழிய சிறைத் தண்டனையும் 20 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற உத்தரவு பிறப்பித்தது.

மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் சிற்றுண்டிச் சாலையில் செவ்வாய்க்கிழமை (11) விற்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக 52 மாணவர்கள் சுகவீனமுற்ற நிலையில் கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 27 மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

குறித்து மாணவர்கள் பாடசாலை இடைவேளை நேரத்தில் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச் சாலையில் நூடில்ஸ் வாங்கி உண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக செங்கலடி சுகாதார வைத்திய அலுவலகம். அதிகாரிகள் பாடசாலைக்குச் சென்று உணவு மாதிரிகளை பரிசோதனை மேற்கொண்ட தாக்குதல் செய்யப்பட்டது.

# வெள்ளி முதல் விடுமுறை

அதன்படி, முதலாம் தவணையின் முதல் கட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவடையும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முதல் பாடசாலை தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் செவ்வாய்க்கிழமை 01ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

# சிறிகொத்தாவில் ராஜிதவுக்கு எதிர்ப்பு

இந்நிகழ்வில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கட்சித் கலந்து கொண்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் களுத்துறை மாவட்ட அமைப்பாளருமான லக்ஷ்மன் விஜேமான்ன எதிர்ப்பை தெரிவித்தார்.

இருப்பினும், கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலையிட்டு நிலைமையை அமைதிப்படுத்தினார்.

# மூவரின் செலவுகள் அம்பலமானது

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (12) விசேட கூற்றை முன்வைத்தே இதனை சமர்ப்பித்தார். அவர், தொடர்ந்து கருத்துரைக்கையில்,2023,2024 ஆகிய காலப்பகுதிகளில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் வாகன பயன்பாடு மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்துக்கான செலவுகளையும், பிரதி சபாநாயகர்அஜித் ராஜபக்ஸ மற்றும் குழுக்களின் பிரதி தலைவர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் வாகனங்கள் மற்றும் எரிபொருள் செலவு தொடர்பான விபரங்களை 2025.02.27 ஆம் திகதி சபைக்கு சமர்ப்பித்தேன்.

இதனைத் தொடர்ந்து முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நான் குறிப்பிட்ட விடயங்கள் பொய்யானவை, அடிப்படையற்றவை என்று ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளார்.பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வமாக தகவல்களையே சபைக்கு சமர்ப்பித்தேன்.

முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 2023 ஆம் ஆண்டு 8 அரச வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார் அதற்காக 26 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல் 2024 ஆம் ஆண்டு 9 மாத காலப்பகுதியில் 9 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். அதற்காக 33 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

அதேபோல் முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ 2023ஆம் ஆண்டு 6 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார்.அதற்கு 16 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு 6 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார்.அதற்கு 13 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் குழுக்களின் பிரதி தலைவர் அங்கஜன் இராமநாதன் 2023 ஆம் ஆண்டு 4 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். அதற்கு 7.8 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல, 2024ஆம் ஆண்டு 4 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார் இதற்கு 7.2 மில்லியன் ரூபாய் எரிபொருக்காக செலவிடப்பட்டுள்ளது. இந்த விபரங்களைப் பாராளுமன்ற நிதிப் பணிப்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார் என்றார்.

# வீணையில் ஈ.பி.டி.பி. தனித்துப் போட்டி

ஈ.பி.டி.பி தனது தனித்துவத்துடன் அனைத்து தேர்தல்களிலும் முகங்கொடுத்துக் கூறி வருகின்றது.

குறிப்பாக வடக்கின் ஐந்து மாவட்டங்கள் கிழக்கில் மூன்று மாவட்டங்கள் உள்ளடங்கலாக வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஈ.பி.டி.பி., தனது சின்னமான வீணைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட உள்ளது என்றார்.

# சாகலவின் வீட்டில் தேசபந்து?

பதுங்கியிருப்பதாகவும், அந்த வீடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேடுதல் விறாந்துடன், செவ்வாய்க்கிழமை (11) இரவு அங்கு சென்ற மாத்தறை சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு தேடுதல், விசாரணையை மேற்கொண்டது.

# “இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை மாற்ற வேண்டும்”



திறமையான மற்றும் செயற்திறன் கொண்ட முதலீடுகளில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் இந்த நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு பரந்த பங்களிப்பை வழங்கும் நிறுவனமாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை மாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை வலியுறுத்தினார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய செயல்பாட்டு நடவடிக்கைகள் குறித்து இதன் போது மீளாய்வு செய்யப்பட்டதோடு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நஷ்டத்தைச் சந்தித்தால், அதில் முதலீடு செய்தவர்கள் தான் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள் என்றும், எனவே, முறையான முகாமைத்துவத்தின் மூலம் அதனை அதிக லாபம் ஈட்டும் அரச நிறுவனமாகப் பேண வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நுசித் குமாரதுங்க உள்ளிட்ட பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

# வைத்தியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதைக் கண்டித்து, புதன்கிழமை (12) அன்று நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியர்களால் அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றது.

பதுளையில்...









டிக்கோயாவில்...





யாழ்ப்பாணத்தில்...





நுவரெலியாவில்...





வடக்கு, கிழக்கில் புதிய கூட்டணி

# சைக்கிளில் போட்டி

■ நிதர்ஷன் வினோத்

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தலைமையிலான புதிய கூட்டணி வடக்கு, கிழக்கில் சைக்கிளிலேயே களமிறங்கும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை யாழ். தேர்தல் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் யாழில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.




கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான இந்தக் கட்சிக்கு எமது மக்கள் முழு ஆதரவு வழங்க வேண்டுமென்ற எதிர்பார்ப்போடு தேர்தல் பணிகளை ஆரம்பித்து இருக்கிறோம்.

எங்களுடைய கட்சி இன்றைக்கு யாழில் கட்டுப் பணம் செலுத்தி இருந்தாலும் தொடர்ந்து வடக்கு கிழக்கு முழுவதும் கட்டுப்பணம் செலுத்தி வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய உள்ளது என்றார்.

# கொழும்பு கிளையின் பொதுக் கூட்டம்

AAUPCC

பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையின் 34ஆவது வருடாந்த பொதுக் கூட்டம், கொழும்பு-07, இல 28/10, மலலசேகர மாவத்தையில் உள்ள இலங்கை மேம்பாட்டு நிர்வாக நிறுவன (SLIDA), பிரதான கேட்போர் கூடத்தில் (சன்ஹிந்த) 2025 மார்ச் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை நடைபெறும். மேலதிக விபரங்களக்கு, https://www. aaupcc.org/ என்ற இணையதளத்தைப் பார்வையிடவும் அல்லது AAUPCC பொதுச் செயலாளர் பாலித சியம்பலாபிட்டியவை palithasiyambalapitiya@gmail.com அல்லது 077 7741616 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விமானத்தில் பாலியல் சேஷ்டை:


# பயணிக்கு பயணத் தடை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானப் பணிப்பெண்கள் இருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்த முயன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பயணி கொழும்பு பிரதான நீதிமன்றத்தால் பிணையில் விடுக்கப்பட்டுள்ளார்.

தலா ரூ.100,000 பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுவித்த கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி, சந்தேக நபருக்கு பயணத் தடையையும் விதித்தார். யாழ்ப்பாணம் - நயினாதீவு பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட ஸ்வீடன் நாட்டில் வசிக்கும் 65 வயதான நபரே கைது செய்யப்பட்டார். இவர் இரட்டை குடியுரிமை பெற்றுள்ளார்.

மும்பையிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த விமானத்தில் அநாகரீகமான முறையில் நடந்துகொண்ட குற்றச்சாட்டில், விமான நிலைய பொலிஸாரால் அவர், புதன்கிழமை (12) காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பயணி அதிக மதுபோதையில், சக



பயணிகளிடம் மோசமாக நடந்துகொண்டதுடன், விமானப் பணிப்பெண்களிடமும் பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பாக, விமானிக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, விமானம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியதும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பாதுகாப்பு அதிகாரிகள், விமான நிலைய பொலிஸாருடன் சேர்ந்து குறித்த பயணியைக் கைது செய்தனர்.

மேலும், பயணியை மருத்துவப் பரிசோதனைக்காகப் பரிந்துரைத்த போது, அவர் மது அருந்தியது உறுதி செய்யப்பட்டுள்ளது.



# இலை வெட்ட சென்றவர் மரணம்

■ எஸ்.சதீஸ்

பொகவந்தலாவ, லெச்சுமி தோட்ட பகுதியிலுள்ள கால்வாய் ஒன்றில் இருந்து செவ்வாய்க்கிழமை (11) ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொகவந்தலாவ லெட்சுமி தோட்டம் மத்திய பிரிவைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 57வயதுடைய சிவனு பாக்கியநாதன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஆட்டுக்கு இலை வெட்டச் சென்ற நிலையில், இரவு ஏழு மணி வரை வீடு திரும்பாததால் தோட்ட பொதுமக்கள் இணைந்து அவரை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது, அவர் கால்வாய் ஒன்றில் விழுந்து கிடந்ததைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதற்கமைய சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேதப் பரிசோதனைக்காக டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹிருணிகா விவாகரத்து

"நானும் எனது கணவரும் திருமண வாழ்க்கையில் இருந்து பிரிய முடிவு செய்துள்ளோம்" என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரன் தன்னுடைய முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் தெரிவித்துள்ளதாவது, "மிகுந்த யோசனைக்குப் பிறகு நானும் ஹிரனும் எங்கள் திருமணத்திலிருந்து பிரிய முடிவு செய்துள்ளோம். இந்த முடிவு பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலுடன் எடுக்கப்பட்டது.

நாங்கள் கிட்டத்தட்ட 10 வருடங்கள் ஒன்றாகக் கழித்திருக்கிறோம். எங்கள் கனவுகளின் வாழ்க்கையை நாங்கள் ஒன்றாக உருவாக்கியுள்ளோம். கூட்டாளர்களாக நாங்கள் அனுபவித்த அன்புக்கு நாங்கள் உண்மையிலேயே நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

நாங்கள் திருமணம் செய்துகொண்டபோது, வாழ்க்கை எதிர்பாராத திருப்பங்களை எடுக்கக்கூடும் என்பதை நாங்கள் புரிந்துகொண்டதால், என்றென்றும் வாக்குறுதி அளிக்கவில்லை. அதற்கு பதிலாக, ஒவ்வொரு நாளும் எங்களால் முடிந்ததைச் சிறப்பாகச் செய்ய நாங்கள்



உறுதி பூண்டோம், அதைத்தான் பல மகிழ்ச்சியான வருடங்களாக நாங்கள் செய்து வந்தோம்.

எங்கள் பாதைகள் வேறுபட்ட ஒரு குறுக்கு வழியில் நாங்கள் வந்தடைந்தோம். இது சாதாரணமாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல, நாங்கள் பல மாதங்களாக யோசித்தோம், ஆனால் இறுதியில் ஒருவருக்கொருவர் சுதந்திரம் கொடுக்கும் முடிவுக்கு வந்தோம். நாங்கள் பகிர்ந்து கொண்ட நேரத்திற்கு நாங்கள் நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம்.

நாங்கள் ஒருவருக்கொருவர் சிறந்ததை மட்டுமே விரும்புகிறோம். உங்கள் கருணை, அன்பு மற்றும் எங்கள் பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கு நன்றி" என குறிப்பிட்டுள்ளார்.

# சுங்க அதிகாரி உட்பட மூவர் கைது

9 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுகளை கடத்த முயன்ற சுங்க அதிகாரி உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற போது, கைது செய்யப்பட்டுள்ளனர்.

துபாயிலிருந்து வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒரு வர்த்தகரும் அவரது உதவியாளரும் இலங்கை வந்துள்ளனர். பின்னர் சுங்க அதிகாரி தனது உத்தியோகபூர்வ அடையாள அட்டையுடன் விமான நிலையத்திற்குள்



நுழைந்து சிகரெட்டுகளை விமான நிலையத்திற்கு வெளியே எடுத்துச் செல்ல முயன்றார்.

இருப்பினும், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (PNB) அதிகாரிகள் அவர்களின் திட்டத்தை முறியடித்து, விமான நிலைய வளாகத்தில் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

# யாழில் தவறான முடிவெடுத்த இராகலை நபர்

■ எஸ்.தில்லைநாதன்

இராகலை தோட்டத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் தவறான முடிவெடுத்து தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்றுள்ளது.

இராகலை தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பன்னீர்செல்வம் சந்திரபோஸ் (வயது 38) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் ஆவரங்கால் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் பணிபுரிந்து வருகின்றதுடன், அவரது விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. குறித்த நபர் கோப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு சென்று, அந்த வீட்டில் உள்ள ஆட்டு கொட்டகையில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இதனை அவதானித்த குறித்த வீட்டின் உரிமையாளர்கள் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பொலிஸாரால், சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற உடற்கூற்று பரிசோதனையின் பின்னர், சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பெண்கள் அமைதியாக இருக்காமல் தைரியம், வலிமையுடன் இருக்கு வேண்டும்

அனுராதபுரத்தில் பெண் வைத்தியரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம், நமது நாட்டை பொருத்தவரையில் முதலாவது சம்பவமாக இருந்தாலும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு முதலாவது சம்பவமும் அல்ல, இறுதியானதாகவும் இருக்காது என்பதே எமது அவதானிப்பாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாலியல் துன்புறுத்தல், குறிப்பாக பணியிடங்களில், இன்று சர்வசாதாரணமாகி வருகிறது. பாலியல் வன்புணர்வு குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனையின் தண்மையே, இவ்வாறான குற்றங்களை மீண்டும் மீண்டும் செய்யத்தூண்டுகின்றது.

இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், அதை எதிர்கொள்ளும் பெரும்பாலான பெண்கள் பாலியல் துன்புறுத்தல் அல்லது அநீதிக்கு ஆளாகிறோம் என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள், ஆனால் பல்வேறு சமூக மற்றும் தனிப்பட்ட காரணங்களால் அமைதியாக இருக்கிறார்கள்.

பெண்கள் தங்களுக்கு எதிராக நடக்கும் இதுபோன்ற குற்றங்கள் மற்றும் அநீதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்கள், ஏனெனில் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் கூட, சமூகம் தங்களைக் குறை கூறும் அல்லது அவமானப்படுத்தப்படும் என்ற அச்சத்தில் அமைதியாகி விடுகின்றனர்.

பணியிடத்தில் பெண்கள் எதிர்கொள்ளக்கூடிய பல வகையான துன்புறுத்தல்களும் உள்ளன. ஒரு பெண்ணை மகப்பேறு விடுப்பு அல்லது அவளுக்கு உரிமையுள்ள பிற விடுப்பு எடுக்க அனுமதிக்காதது, வேலை நேரத்திற்குப் பிறகும் பணியிடத்தில் வேலை செய்யக் கட்டாயப்படுத்துவது, இரவில் வேலை செய்யத் திட்டமிடப்பட்ட ஒரு பெண்ணுக்கு உணவு மற்றும் ஓய்வு அறைகள் போன்ற சரியான வசதிகளை வழங்காதது ஆகியவை இதில் அடங்கும்.

பாலியல் துன்புறுத்தல் என்பது வெறும் உடல் ரீதியான துன்புறுத்தல் மட்டுமல்ல, ஆபாச நகைச்சுவைகள், வாய்மொழி துஷ்பிரயோகம், ஆபாச வதந்திகளைப் பரப்புதல் போன்றவற்றின் மூலம் உளவியல் ரீதியாக ஒடுக்குமுறை சூழலை உருவாக்கும் எந்தவொரு செயலும் பாலியல் துன்புறுத்தலாகக் கருதப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களின் ரகசியத்தன்மையையும் நிறுவனம் பாதுகாக்க வேண்டும்.

குழந்தைகள், பெண்கள் மற்றும் இளைஞர்களை வேலைக்கு அமர்த்துதல், கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் (சேவை மற்றும் ஊதிய ஒழுங்குமுறை) அவசரச் சட்டம், தொழிற்சாலைகள் அவசரச் சட்டம் போன்ற சட்டங்கள் மூலம். பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதில் இலங்கைச் சட்டமும் ஓரளவு அக்கறை காட்டியுள்ளது. ஆரம்பத்தில், இரவு வேலைகளில் பெண்களைப் பணியமர்த்துவது முற்றிலுமாகத் தடைசெய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் எதிர்கால தொழிலாளர் மற்றும் பெண்கள் உரிமைச் சட்டங்களில் பெண்களுக்குச் சிறந்த பணிச்சூழலை உருவாக்குவதற்குத் தேவையான விதிகள் சேர்க்கப்படும் என்று நம்பப்பட்டாலும், சட்ட விதிகளுக்கு மேலதிகமாக, பெண்கள் மத்தியில் அவர்களின் உரிமைகள் குறித்த சமூக விவாதமும் விழிப்புணர்வும் இருக்க வேண்டும். அதேபோல், பாதிக்கப்பட்டவர்களாக தங்களுக்கு நிகழும் வன்முறையைப் பற்றி அமைதியாக இருக்காமல், இந்தப் பாலியல் வன்முறைக்கு வலுவான எதிர்ப்பை உருவாக்க, தைரியத்தையும் வலிமையையும் பெண்கள் கொண்டிருக்க வேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக. முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாக சம்பவித்துவிடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் எவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது.

தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# ‘தாஜா’ பண்ணும் வேலையில் கட்சித்தலைமை

முருகானந்தம் தவம்

பாதாள உலகக் குழுக்களின் கொலை வெறியாட்டங்கள், பாதாளக் குழுக்கள், குற்றங்கள், சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள முப்படைகள், அரிசித் தட்டுப்பாடு, தேங்காய்களின் விலையேற்றம், ‘புது மாப்பிள்ளைகள்’ போல, அமைச்சர்கள் சிலர் செய்யும் அலப்பறைகள், அனுபவமற்ற பேச்சுக்கள், செயற்பாடுகள் என நாட்டு மக்களிடையில் கடும் எதிர்ப்புக்களையும் விமர்சனங்களையும் சந்தித்துவரும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது தனது அமைச்சர்கள், எம்.பிக்களினால் கட்சிக்குள்ளும் ‘புதிய நெருக்கடி’ ஒன்றை எதிர்கொண்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அரியணையைக் கைப்பற்றவும் பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றவும் தேர்தல் பிரசார மேடைகளிலும் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஏற்படுத்திய எதிர்பார்ப்புக்களை, அறிவித்த திட்டங்களை நிறைவேற்ற எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்காததால் கட்சிக்கு வெளியே கடும் விமர்சனங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வரும் அனுரகுமார அரசாங்கம், தேர்தல் காலத்தில் தமது கட்சி தொடர்பில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதாலேயே கட்சிக்குள் இந்த புதிய நெருக்கடிகளையும் முரண்பாடுகளையும் எதிர்ப்புக்களையும் எதிர் கொண்டுள்ளது.

ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல் பிரசார மேடைகளில் “நாம் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதியோ, அமைச்சர்களோ, எம்.பி.க்களோ எந்தவித சிறப்பு சலுகைகளையும் அனுபவிக்க மாட்டோம். தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிகளை பெற மாட்டோம், எமது சம்பளங்களை மக்கள் அபிவிருத்திக்கு செலவிடுவோம்” என வழங்கிய வாக்குறுதிகள் மூலம் மக்களின் நம்பிக்கையைப்பெற்று ஆட்சி பீடம் ஏறிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அனைத்து சலுகைகளும் ஏற்கெனவே தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கமைய இல்லாமலாக்கப்பட்டுள்ளமையால் ஏற்பட்டுள்ள அதிருப்தியில் 15க்கும் மேற்பட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது பதவியை விட்டுச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளமையாலேயே இந்த புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு (என்.பி.பி.) 159 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், இவற்றில் 107 பேர் தேசிய மக்கள் சக்தியையும் 52 பேர் நேரடியாக ஜே.வி.பியையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். எனினும், தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 107 பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் கலாநிதி பட்டம் மற்றும் பேராசிரியர் பட்டங்களை வகிப்பவர்கள். அதேபோல, பெரிய நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்து அதிக சலுகைகள் மற்றும் அதிக சம்பளத்துடன் பணியாற்றிய நிலையில் தற்போது தங்களுடைய பாராளுமன்ற உறுப்புரிமைக்காக அவற்றைக் கைவிட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பளம், சலுகைகள், வாகனங்கள், எரிபொருள், ஊழியர்கள் போன்றவற்றைப் பெற மாட்டார்கள் என தேர்தல் காலத்தில் மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளமையால், அவர்கள் இப்போது அதைப் பெற முடியாது சிரமப்படுகின்றார்கள். முழு நேர ஜே.வி.பி. உறுப்பினர்கள் அத்தகைய சலுகைகள் இல்லாமல் வாழ முடிந்தாலும், உயர்மட்ட சம்பளம், வேலைகள் மற்றும் சலுகைகளை ஒதுக்கி வைத்து விட்டு பாராளுமன்றத்திற்கு வந்த ஒரு குழுவினருக்கு இது இப்போது ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. சம்பளம், சலுகைகளா அல்லது கட்சிக்கான தியாகமா என்ற குழப்பத்திலும் விசனத்திலும் இந்த அமைச்சர்கள், எம்.பிக்கள் உள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனாதிபதி பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்கள் கூட ‘மக்கள் அபிவிருத்திக்காக’ என்ற பெயரில் ஜே.வி.பி. கட்சியின் கணக்கிற்கே செல்கின்றன. உதாரணமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு அடிப்படை சம்பளமாக 54,500 ரூபாவும் பிரதி அமைச்சர்களுக்கு 65,000 ரூபாவும் அமைச்சர்களுக்கு 85,000 ரூபாவும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளபோதும், அவர்களுக்கான விசேட கொடுப்பனவுகளை

> **தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பளம், சலுகைகள், வாகனங்கள், எரிபொருள், ஊழியர்கள் போன்றவற்றைப் பெற மாட்டார்கள் என தேர்தல் காலத்தில் மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளமையால், அவர்கள் இப்போது அதைப் பெற முடியாது சிரமப்படுகின்றார்கள்**

உள்ளடக்கி ஒவ்வொருவரும் 3 இலட்சம் ரூபாய் முதல் 4 இலட்சம் ரூபாய் வரை பெற்று வந்த நிலையில், இவர்களின் அடிப்படைச் சம்பளம் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சர்களுக்கு வழங்கப்படுவதுடன் மிகுதி பெரும் தொகையான கொடுப்பனவுகள் ஜே.வி.பி. கட்சியின் கணக்கிற்கே செல்வதாகக் கூறப்படுகின்றது.

இதற்கமைய பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு (என்.பி.பி.)159 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில் ஒரு மாதத்தில் மட்டும் 4 கோடி ரூபாவுக்கு மேல் ஜே.வி.பி. கட்சியின் கணக்கிற்கே செல்கின்றது.பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் ,விசேட கொடுப்பனவுகளை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களினால் மக்கள் சேவைக்கு, அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியாது அது ஜே.வி.பி. கட்சிக்குச் செல்வது ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி கூட்டுக்குள் முரண்பாடுகளை, வெறுப்புக்களை ஏற்படுத்தியுள்ளதுடன், மக்கள் மத்தியிலும் விவாதங்களையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

எனவே, சம்பளம், வாகனங்கள், எரிபொருள் மற்றும் சிறப்புரிமைகள் உள்ளிட்ட சலுகைகள் இல்லாமல் ஐந்து ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தொடர்ந்து பதவி வகிப்பதா அல்லது பாராளுமன்றத்தை விட்டு வெளியேறி, தங்களுடைய முன்னைய பணியையே தொடர்வதா என்பது குறித்து விரக்தியடைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர். தற்போது அந்த விவாதம் உச்சத்தை எட்டியுள்ளமையால் விரைவில் ஒரு குழுவினர் தேசிய மக்கள் சக்தி அரசிலிருந்து வெளியேறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக தெரியவருகின்றது.

ஒருவேளை, கட்சிக் கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்படாது எமக்கு சம்பளம், சலுகைகள்தான் முக்கியம் எனக்கூறி பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராவது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து விலகினால் இவ்வாறான நிலையை எதிர்கொள்ள தங்களது பதவிகளை இராஜினாமா செய்யும் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடங்களுக்கு முழு நேர ஜே.வி.பி. உறுப்பினர்களை நியமிக்க கட்சித் தலைமை தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

படித்து பட்டம் பெற்றாலும், ஆட்சி செய்த அனுபவமின்றி அமைச்சர்கள் முட்டாள்கள் போன்று அல்லது மக்களை முட்டாள்களாக நினைத்துக் கூறி வரும் கருத்துக்கள் அனுரகுமார அரசின் ‘கல்விமான்கள் அதிகம் உள்ள அரசு’ என்ற விம்பத்தை உடைத்து ‘அரசியல் கோமாளிகள்’ உள்ள அரசு என்ற விமர்சனத்தை உருவாக்கி வரும் நிலையில், சிறப்பு சலுகைகளை அனுபவிக்க மாட்டோம், வாகன அனுமதிக்கான பெர்மிட் பெற மாட்டோம், ஆடம்பர செலவுகளை செய்ய மாட்டோம், எமது சம்பளங்களை, விசேட கொடுப்பனவுகளை கட்சிக்கே வழங்குவோம் என தேர்தல் காலத்தில் வெற்றி பெறுவதற்காகக் கொடுத்த வாக்குறுதிகள் அனுரகுமார அரசாங்கத்துக்கு தற்போது பெரும் உள்ளக நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்த நெருக்கடியைத் தவிர்க்க இவ்வாறு குழம்பும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சில நம்பிக்கைகளைக் கொடுத்து ‘தாஜா’ பண்ணும் வேலையில் கட்சித் தலைமை ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

## கடிதங்கள்

### வீதியில் குவிக்கப்படும் குப்பைகளால் அசௌகரியம்

பெரியநீலாவணை சந்தியில் இருந்து துறைநீலாவணை நோக்கி செல்லும் பிரதான வீதியின் இடப்பக்கமுள்ள குளக்கரையில் தினமும் ஆடு, மாடு மற்றும் கோழிக் கழிவுகள் குப்பைகள் இனந்தெரியாதோரால் கொட்டப்பட்டு வருகிறது.

இதனால் அப்பகுதியில் உள்ள குடும்பம் பாதிக்கப்பட்டுள்ளது மாத்திரமல்லாமல், அந்த சூழல் பாதிக்கப்பட்டு மாசடைந்து கொண்டிருக்கிறது.


இதனை அப்பகுதி குடியிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநரசபையிடமும் பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். குப்பைகள் கொட்டுவதை தடுப்பதற்கு கல்முனை மாநகர சபை அல்லது மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமாறு என்று அந்த மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

- வி.ரி.சகாதேவராஜா



# அரோகரா...


மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த பஞ்ச ரத பவனி, புதன்கிழமை (12) காலை முதல் வெகு விமர்சையாக இடம்பெற்றது. நாடளாவிய ரீதியில் இருந்து மட்டுமன்றி, கடல் கடந்த நாடுகளில் இருந்தும் வருகைதந்திருந்த பெருந்திரளான மக்கள், காவடி எடுத்து, அரோகரா... அரோகரா... என்று கூறி, பஞ்ச ரதங்களின் வடங்களைப் பிடித்து தேர்களை இழுத்து பக்தி பரவசத்துடன் இருந்தனர்.













# “எதிர்ப்புகளை கருத்திற்கொள்ளக் கூடாது”

காட்டு விலங்குகள் இதுவரை காலமும் இலங்கையில் கணக்கெடுப்பப்படவில்லை. முகாமைத்துவ கொள்கையை வகுப்பதற்காகவே காட்டு விலங்குகளைக் கணக்கெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. புதிய ஒரு விடயத்தை ஆரம்பிக்கும் போது எதிர்ப்புக்களும், தோல்விகளும் ஏற்படும். அவற்றைக் கருத்திற்கொள்ளக் கூடாது என கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(12) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள் ,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கால்நடை வைத்திய சேவையில் அதிகளவில் பற்றாக்குறை காணப்படுகிறது. இதற்கு உடனடியாகத் தீர்வு காண்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை மேம்பாட்டுக்கு நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சு விசேட பங்கு வகிக்கிறது.பல பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

அரிசி தட்டுப்பாட்டுப் பிரச்சினையுடன் தான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றோம்.

விவசாய நாடு என்று குறிப்பிடப்பட்டாலும் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. இது கவலைக்குரியது. துரிதகரமான செயற்பாடுகளினால் அரிசி தட்டுப்பாட்டுக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது என்றார்.

# “எமது மண்ணை சுவாசிக்க முடியாது”



பலாலியை அண்டிய பகுதிகளான வலி. வடக்கு மற்றும் வலி. கிழக்கில் பெருமளவான காணிகள் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கின்றன. எத்தனையோ ஆயிரம் தலைமுறைகளை இழந்தும் எமது மண்ணை சுவாசிக்க முடியாது என்று யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(11) இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீது உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிங்களப் பேரினவாதம் எமது தமிழினத்தை சமமாக வாழ விடக்கூடாது என்பதனையே ஏற்படுத்தியுள்ளது. நில உரிமை, மொழி உரிமை, தாய் மண்ணை நேசிக்கும் உரிமை எங்களுக்கு உள்ளன. வடக்கில் இருந்து கிழக்கு மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றார்.

# “231.67 ஏக்கர் காணிகளை விடுவிக்கவும்”



கடந்த 1985ஆம் ஆண்டில் வவுனியாவில் விமான நிலைய விஸ்தரிப்புக்காக மூன்று கட்டங்களாகக் காணிகள் கையகப்படுத்தப்பட்டன. மூன்றாம் கட்டத்தில் அங்கு 231.67 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டன. அந்தக் காணிகள் வவுனியா நகர விஸ்தரிப்புக்கு முக்கியமானவையாகும்.

இவற்றை விடுவித்து நகர விஸ்தரிப்புக்காக விடுவிக்குமாறு தமிழரசுக்கட்சியின் எம்.பி. சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா ஈச்சங்குளத்தில் பொதுமக்களின் காணி, மாவீரர் துயிலும் இல்லம் இருந்த காணி இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு முகாம் அமைக்கப்பட்டது. கனகராயன் குளத்திலும் 14 ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# “உறுதிகளை நிபந்தனையின்றி வழங்கவும்”



வறுமையின் பிடியில் சிக்கியுள்ள மக்களிடம் இருந்து நிலங்களை சுவீகரித்து விட்டு பதிலீடாக வழங்கப்பட்ட காணிகளுக்குக் குத்தகை கோருவதும், உறுதிகளை வழங்காமல் இருப்பதும் நியாயமற்ற செயலாகும். இதனால் அவர்களுக்கான உறுதிகளை நிபந்தனையின்றி வழங்குமாறு உரிய அமைச்சரிடம் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஞானமுத்து சிறிநேசன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்த காலத்தில் 1985இல் மட்டக்களப்பு விமான நிலையம் பாதுகாப்பு என்ற காரணத்தில் திடீரென விஸ்தரிக்கப்பட்டது. அதன் காரணமாக வலையிறவு, புதுவூர், சேற்றுக்குடா, திமிலைதீவு மற்றும் திருப்பெருந்துறை போன்ற 5 கிராமத்தவர்களின் வீடுகள், வீட்டுக் காணிகள், வயல்கள், வாணிப நிலையங்கள், பாதைகள் மற்றும் பாடசாலைகள் என்று கணிசமான பகுதிகள் அரசினால் கையகப்படுத்தப்பட்டு, பின்னர் சுவீகரிக்கப்பட்டன.

இதனால் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிர்க்கதியாக்கப்பட்டனர். அதன்பின்னர் பதில் காணிகள் என்ற வகையில் 250 குடும்பங்களுக்கு அவை வழங்கப்பட்டன.

அவை வழங்கப்பட்டு 30 வருடங்கள் கடந்துள்ள போதும் இன்னும் அந்தக் காணிகளுக்கான உறுதியான ஆவணங்கள் வழங்கப்படவில்லை.

ஆவணங்கள் தருவதாகக் கூறப்பட்டுள்ள நிலையில், அந்த காணிகளுக்குக் குத்தகையாகப் பணம் செலுத்தப்பட வேண்டும் என்று அதிகாரிகள் வற்புறுத்தியுள்ளனர். அவ்வாறு குத்தகை வழங்கினாலே உறுதிப்பத்திரம் வழங்க முடியும் என்றார்.

# “கிழக்கில் காணிகளை விடுவிக்கவும்”



கிழக்கில், படையினர் வசமிருக்கும் பொதுமக்களின் காணிகளையும் பொது காணிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(11) பாராளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் சமர்ப்பித்த பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், புதுவூர் சித்திவிநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான தேரோட்டம் செய்யும் நிலமும் விமான படையின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே இருக்கின்றது. ஆரம்ப காலத்தில் ஏ, பி, சீ என்ற வலயங்களாக அந்தப் பகுதிகள் பிரிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த காலங்களில் சீ வலயத்தில் உள்ள சிறிய பகுதியொன்று விடுவிக்கப்பட்டுள்ளது. இப்போது யுத்தம் இல்லாத சூழலில் ஏ வலயம் மட்டும் போதுமானது. பி மற்றும் சீ வலயத்தை விடுவித்தால் குறித்த ஆலயத்தின் நிலம் கிடைக்கும் என்றார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலையடிவெட்டை பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் பொதுச் சந்தையும் முறக்கட்டாஞ்சேனை மற்றும் காயங்கேணி ஆகிய பிரதேசங்களிலும் பாடசாலைகள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன. தாண்டியடியில் விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டில் துயிலும் இல்லம் உள்ளது. எவ்வாறாயினும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாவட்ட அபிவிருத்திக் குழுவிலும் இது தொடர்பில் அறிவித்துள்ளோம் என்றார்.

# “தற்றுணிவை வரவேற்கிறேன்”



காட்டு விலங்குகளால் ஏற்படும் பாதிப்பு தீவிரமடைந்துள்ளது. காட்டு விலங்குகளைப் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பிடுபவர்கள் கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகள் எதிர்கொள்ளும் அவலநிலையை அறிவதில்லை. காட்டு விலங்குகள் தொடர்பில் விவசாயத்துறை அமைச்சர் தற்றுணிவுடன் குறிப்பிட்ட விடயத்தை புதிய ஜனநாயக முன்னணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுராத ஜயரத்ன வரவேற்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (12) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதிகளும் மனிதர்களும் என்று போதித்துக் கொண்டிருந்தால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவார்கள். காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்த வேண்டும் இல்லையேல் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். 2022ஆம் ஆண்டு 93 மில்லியன் தேங்காய்களைக் காட்டு விலங்குகள் நாசம் செய்துள்ளன.

2022ஆம் ஆண்டு மாத்திரம் காட்டு விலங்குகளினால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு 30,215 மில்லியன் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றார்.



# புத்தனின் தந்தை



சாந்தி ஜொ

“ வாழ்க்கை என்பதையே வெறுக்கத் தொடங்கினார்கள். இறுதியில் அக்கா, தங்கை இருவரும் புத்தரின் கொள்கைகளில் ஆறுதல் கண்டு புத்த பிக்குவாக மாறி விட்டார்கள்

“ உலகம், வாழ்க்கை, திருமணம் போன்றவற்றை வெறுத்து ஒதுக்கி அதில் கிடைக்காத அமைதியை இங்கு தேடுகிறார்கள் என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம்

“அப்பா, உலகில் எவரும் என்றென்றும் நிலைத்திருக்கப் போவதில்லை. என்றோ ஒருநாள் பிரிய வேண்டியவர்களே. ஆகையால், ஓர் உன்னத லஷியத்தை நாடி நான் பிரிகிறேன். அதில் தாங்கள் தடை நிற்கலாகாது” என வேண்டினார். தந்தையின் கண்களில் நீர் ஆறாய் பெருகியது.

காலை 6 மணி. லேனின் வாசலில் நீல நிற ஆட்டோ நின்று கொண்டு இருக்கிறது. உரிமையாளர் ஜோதிபால அதன் அருகில் இல்லை. ஆட்டோவுக்கு மட்டுமா அவர் உரிமையாளர்? எங்கள் சங்கராஜா லேனில் உள்ள பதினைந்து வீடுகளில் ஒரே வரிசையில் இரண்டு வீடுகள் அவருடையது. அதில் ஒன்று மாடி வீடு. அதை பூட்டியே வைத்துள்ளார். மற்றொன்று மூன்று படுக்கையறைகள், பெரிய ஹோல் கொண்ட விசாலமான வீடு.

அதுமட்டுமா? களனியில் ஒரு பெரிய வீடும் அவருக்கு உண்டு. 52 வயதில் இவ்வளவு சொத்தை வைத்துக் கொண்டு அனுபவிக்கலாம் தானே என்று சொல்ல தெரிந்த நமக்கோ, அவரது மனம் இறுப்புக் கொள்ளாமல் ஒவ்வொரு நாளும் படும் வேதனை தெரியாது. எனக்கும் ஆரம்பத்தில் தெரியவில்லை. என் மனைவி சொல்லி தான் அவரைப்பற்றி தெரிந்துத் கொண்டேன்.

என் மனைவி பிறந்து வளர்ந்தது இந்த சங்கராஜா லேனில் தான். தினமும் தன் மகளை பார்க்காமல் இருக்க முடியாது என்று என் மாமியும், மாமனாரும் அடம் பிடித்ததற்காக வேண்டி கல்யாணத்திற்குப் பிறகு அதே லேனில் நாங்களும் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து கொண்டோம். அதிலும் என் மாமனார் அவளின் மீது உயிரையே வைத்திருக்கிறார். அவள் ஏதாவது சொன்னாள் மறுபேச்சு பேசாமல் இருப்பார். அப்பாக்கள் தாழ்ந்து போவது பிள்ளைகளிடம் மட்டும் தான் போல.

அன்று ஜோதிபால எங்கள் வீட்டிற்கு வந்தார். அவிசாவளையில் அமைந்துள்ள அந்த இடத்திற்கு நாளை காலை தான் செல்வதாகவும், என் மனைவியையும், அவள் அம்மாவையும் உடன் வருமாறும் கேட்டுக் கொண்டார். மாமியும் கேட்டவுடன் கண்டிப்பாக வருவதாக உறுதிக் கூறினாள்.

அவர் போன பிறகு என் மனைவி ஜோதிபாலவின் சொந்தக் கதையை என்னிடம் விவரித்தாள். அது அவருக்கு மட்டும் சொந்தமான கதையல்ல. இவரை போன்ற பல பேர்களின் கதையென்று பிறகு எனக்குப் புரிந்தது.

குடிக்காரர்களுக்கு குடித்த பிறகு ஏற்படும் வெறியைக் காட்டிலும் குடிப்பழக்கமில்லாத ஜோதிபாலவுக்கு அவர் மனைவியின் முகத்தை பார்த்ததும் உள்ளுக்குள் தீ கசிய ஆரம்பித்து விடுமாம். தினமும் வீட்டில் இருவருக்கும் சண்டை சண்டை தான். ஜோதிபாலவுக்கு தன் மகள்கள் இருவர்களிடமும் கொள்ளை பாசம். சிறு வயதாக இருந்ததிலிருந்தே தங்கள் முன் சண்டை போட்டுக் கொண்டு நாட்களை கடத்திய பெற்றோர்கள், தங்களுக்கு விவரம் தெரிந்த பிறகும் அப்படியே இருக்கிறார்களே என்று மகள்கள் இருவரும் கவலைப்பட்டார்கள். இருவருக்கும் சரியாக படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. வாழ்க்கை என்பதையே வெறுக்கத் தொடங்கினார்கள். இறுதியில் அக்கா, தங்கை இருவரும் புத்தரின் கொள்கைகளில் ஆறுதல் கண்டு புத்த பிக்குவாக மாறி விட்டார்கள். பிள்ளைகள் மாறி சில நாட்களில் தாயும் அவர்களுடன் மடத்தில் போய் சேர்ந்து விட்டாள். ஜோதிபாலவும் யாரும் இல்லாதவர் ஆனார். தனிமை அவரை வாட்டி வதைத்தது. வாரத்தில் ஒருநாள் ஞாயிற்றுகிழமை மகள்கள் தங்கியுள்ள அவிசாவளை புத்த மடத்திற்கு அவர்களை பார்க்க செல்லும் ஜோதிபால, மகள்களிடம் பேசி பழையபடி வீட்டிற்கு வந்து தங்க சொல்லுமாறு பக்கத்து வீட்டுக்காரர்கள், சில சமயம் தெரிந்தவர்கள் போன்றோரை உடன் அழைத்து சென்று பேசி பார்க்க சொல்வார்.

அதில் இந்த வாரம் அவரின் மகள்கள் இருவருடன் சிறு பிள்ளை பருவத்திலிருந்தே ஒன்றாக பழகி வளர்ந்த என் மனைவியை அழைத்து செல்ல வந்திருந்தார் ஜோதிபால. அவளுடன், அவள் அம்மாவும், நானும் உடன் சென்றோம்.

மழை விடாமல் பெய்தது. மடத்தில் ஒரு ஓரத்தில் நாங்கள் நின்றோம். மனதுக்குள் சொல்ல முடியாத ஒரு வித அமைதி. பிக்குவான ஜோதிபாலவின் மகள்கள் சொன்ன வார்த்தைகள் மட்டும் என்னுள் ஒலித்துக் கொண்டே இருந்தது. “உலக வாழ்க்கை வாழ்வதால் தான் மற்றவர்களின் மகிழ்ச்சிக்கும், துன்பங்களுக்கும் முகம் கொடுத்து அதற்கு தகுந்தாற் போல எங்களை நாங்கள் மாற்றிக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அதனால் பாவம் தான் மிச்சம். நாங்கள் தேர்ந்தெடுத்த இப்பாதை அதிலிருந்து விடுபட உதவுவதுடன் வாழ்க்கை என்றால் இதுதான் என்பதை கற்றுக் கொடுக்கிறது.”

தாய்தந்தையின் சண்டையை பார்த்து வளர்ந்த இவர்கள் உலகம், வாழ்க்கை, திருமணம் போன்றவற்றை வெறுத்து ஒதுக்கி அதில் கிடைக்காத அமைதியை இங்கு தேடுகிறார்கள் என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம்.

மழை நின்றப்பாடில்லை. மனைவி அவள் அம்மாவுடன் ஒரு குடையிலும், நானும் ஜோதிபாலவும் ஒரு குடையிலும் மடத்திலிருந்து ஆட்டோ நிறுத்தியிருந்த இடத்திற்கு ஒன்றாக நடந்தோம். குடை பிடித்தும் எங்கள் மீது மழைத்துளி விழுந்துக் கொண்டு தான் இருந்தது. அதில் ஒரு துளி சூடாக என் கை மீது விழுவதை போல உணர்ந்தேன். அது ஜோதிபாலவின் கண்ணீர் துளி என்று அவரின் முகத்தை பார்க்கமாலே புரிந்து கொண்டேன். எத்தனையோ முறை முயன்றும் தன் புதல்வனை அரண்மணைக்கு திருப்பிக் கொண்டுவர முடியாத புத்தனின் தந்தை சுத்தோதனரின் ஞாபகம் தான் அவர் அருகில் இருந்த போது எனக்கு வந்தது. அவரும் தந்தை தானே!

மாதத்தில் முதலாம் ஞாயிற்றுகிழமையான இன்று ஜோதிபாலவின் ஆட்டோ வழமைப்போல் எங்கள் தெருவிலிருந்த இன்னொரு குடும்பத்தை ஏற்றிக் கொண்டு புத்த மடத்தை நோக்கி செல்கிறது. சுத்தோதனரும் அன்றே இப்படியான முயற்சிகளை செய்திருப்பார்தானே.

பாகிஸ்தான்

# பயணிகள் ரயில் கடத்தல்

- 30 பாதுகாப்பு வீரர்கள், 16 கிளர்ச்சியாளர்கள் பலி
- 104 பயணிகள் விடுவிப்பு
- 200க்கும் மேற்பட்டோர் பணயக்கைதிகளாக தடுத்து வைப்பு



பாகிஸ்தானில், பயணிகள் ரயில் கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம், குவெட்டாவில் இருந்து கைபர் பதுன்கவா மாகாணத்தின் பெஷாவர் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலையே, கிளர்ச்சியாளர்கள் வழிமறித்துக் கடத்தியுள்ளனர்.

பாகிஸ்தானிடமிருந்து பலுசிஸ்தானுக்கு சுதந்திரம் கோரும் பலுச் விடுதலை இராணுவம் (BLA) என்ற பிரிவினைவாத அமைப்பே இந்த கடத்தலை அரங்கேற்றியுள்ளது.

ரயில், பிரு குன்றி மலைப்பகுதியின் அருகில் உள்ள சுரங்கப்பாதையில் சென்று கொண்டிருந்த போது, ஆயுதம் ஏந்திய நபர்கள் ரயிலை வழிமறித்துக் கடத்தியுள்ளனர்.

இந்த ரயிலில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள், பொலிஸார், உளவுத்துறை அதிகாரிகளும் பயணித்துள்ளனர். அவர்களும் பணய கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சிறைபிடிக்கப்பட்ட இராணுவ வீரர்கள், பொலிஸார் என 30 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பலூசிஸ்தான் கிளர்ச்சிப்படை தெரிவித்துள்ளது.

அதேவேளை, எக்ஸ்பிரஸ் ரயில் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தகவலறிந்த பாதுகாப்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தற்போது பாதுகாப்புப்படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச்சண்டை நடைபெற்று வருகிறது.

இந்த மோதலுக்கு நடுவே பணய கைதிகளில் 104 பயணிகளைப் பாதுகாப்புப்படை பத்திரமாக மீட்டுள்ளது.

முன்னதாக சில பணய கைதிகளைக் கிளர்ச்சியாளர்கள் விடுதலை செய்துள்ளனர்.

ரயிலைக் கடத்திய கிளர்ச்சியாளர்களால் 16 பேரை இதுவரை கொன்றுள்ளதாக, பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், பயணிகளில் 104 பேர் மீட்கப்பட்டுள்ளதாக, அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, பலுசிஸ்தான் செய்தித் தொடர்பாளர் ஷாஹித் ரிண்ட் கூறும் போது,

"பாதுகாப்புப் படையினர் 104 பயணிகளை (58 ஆண்கள், 31 பெண்கள் மற்றும் 15 குழந்தைகள்) - ஒரு பெட்டியிலிருந்து மீட்டுள்ளனர்" என்று கூறியுள்ளார்.

ரயிலில் சுமார் 400 பயணிகள் இருந்தனர். இதனால் பாதுகாப்புப் படையினர் மற்றும் பயங்கரவாதிகள் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. பெஷாவர் செல்லும் பயணிகள் ரயிலில் தீவிர துப்பாக்கிச் சூடு நடந்ததாகத் தகவல்கள் வெளியாகி இருக்கும் நிலையில் மீட்புக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ரிண்ட் கூறியுள்ளார்.

ஆனாலும், கிளர்ச்சியாளர்கள் வசம் 200க்கும் மேற்பட்டோர் இன்னும் பணய கைதிகளாக உள்ளனர். அவர்களை மீட்கப் பாதுகாப்புப்படையினர் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதும் பாதுகாப்புப்படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ரஷ்யா

30 நாட்கள்

## போரை நிறுத்துவதற்கு உக்ரைன் சம்மதம்



ரஷ்யாவுடனான போரை 30 நாட்களுக்கு நிறுத்த உக்ரைன் சம்மதம் தெரிவித்துள்ளது.

உக்ரைன், ரஷ்யாவுக்கு இடையேயான போர் இன்று 1,112ஆவது நாளாக நீடித்து வருகிறது.

இந்த போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். அதேவேளை, போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வர உக்ரைனுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், அந்நாட்டுக்கு வழங்கி வந்த இராணுவ உதவி, உளவுத் தகவல்களை அமெரிக்கா நிறுத்தியது.

மேலும், போர் நிறுத்தம் தொடர்பாக உக்ரைன், அமெரிக்கா ஆகிய நாடுகள் சவுதி அரேபியாவில் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

அந்த வகையில், செவ்வாய்க்கிழமை(11) நடந்த பேச்சுவார்த்தையில், ரஷ்யா உடனான போரை 30 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்த உக்ரைன் சம்மதம் தெரிவித்துள்ளது.

தற்காலிக போர் நிறுத்தத்திற்கு உக்ரைன் சம்மதம் தெரிவித்ததையடுத்து, அந்நாட்டிற்கு நிறுத்தி வைக்கப்பட்ட இராணுவ உதவி, உளவுத் தகவல்களை மீண்டும் வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

30 நாட்கள் இடைக்கால போர் நிறுத்தத்திற்கு உக்ரைன் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், ரஷ்யாவின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை.

அதேவேளை, தற்காலிக போர் நிறுத்தம் குறித்து ரஷ்யாவுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

"போரை தற்காலிகமாக நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ஒப்புக்கொள்வார் என எதிர்பார்க்கிறேன்" என்று, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 3 ஆண்டுகளுக்குமேல் நீடித்துவரும் உக்ரைன் - ரஷ்யா போர் தற்காலிகமாக நிறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பங்களாதேஷ்

ஷேக் ஹசீனா குடும்பத்தின்

## சொத்துக்கள் பறிபோயின

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா குடும்பத்தின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமாறு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஷேக் ஹசீனா மீதான ஊழல் வழக்கில் ஊழல் தடுப்பு ஆணையத்தின் கோரிக்கையை ஏற்று டாக்கா நீதிமன்றம், இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.



இதற்கமைய, ஷேக் ஹசீனாவின் இல்லமான சுதாசதன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமான சில சொத்துக்களைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டுள்ளது.

மேலும் ஷேக் ஹசீனாவின் குடும்பத்துக்குச் சொந்தமான 124 வங்கிக் கணக்குகளை முடக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கேரளா

லவ் ஜிகாத்தால்

## 400 சிறுமிகள் பாதிப்பு

கேரளா மாநிலம் கோட்டயம் மாவட்டத்தில், லவ் ஜிகாத்தால் சுமார் 400 சிறுமிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பா.ஜ.க. மூத்த தலைவர் பி.சி.ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

கேரளாவின் கோட்டயம் மாவட்டம் பாலா நகரில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிராக நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில பாஜக மூத்த தலைவர் பி.சி.ஜார்ஜ் பேசியதாவது,

"கோட்டயம் மாவட்டம், மீனாச்சல் வட்டத்துக்குட்பட்ட சுமார் 400 சிறுமிகள் லவ் ஜிகாத் வலையில் (மத மாற்றம் செய்து திருமணம் செய்தல்) சிக்கி பாதிக்கப்பட்டுள்ளனர். "இதில் 41 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்கள் பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்ய 25 வயது வரை காத்திருக்கின்றனர். 24 வயதுக்கு முன்பே அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

"முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்கள் பெண் பிள்ளைகள் 18 வயதை எட்டியதும் திருமணம் செய்து வைக்கின்றனர். ஆனால், படிப்புக்காகவும் அவர்களுடைய வருமானத்தை எதிர்பார்த்தும் கிறிஸ்தவர்கள் பெண் பிள்ளைகளின் திருமணத்தைத் தள்ளிப் போடுகிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டும்" என்றார்.

இவருடைய இந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



சம்பியன்ஸ் லீக்:

## வெளியேற்றப்பட்ட லிவர்பூல்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் வெளியேற்றப்பட்டுள்ளது.

பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து லிவர்பூல் வெளியேற்றப்பட்டுள்ளது.

பரிஸ் ஸா ஜெர்மைனின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றிருந்த நிலையில், புதன்கிழமை (12) அதிகாலை தமது மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பின்னடைவை போட்டியின் வழமையான நேர முடிவில் சந்திக்க மொத்த கோல் எண்ணிக்கை 1-1 என சமனானது.

மேலதிக நேரத்திலும் கோலெதுவும் பெறப்படாத நிலையில், பெனால்டியில் 1-4 என்ற ரீதியில் தோற்றே தொடரிலிருந்து லிவர்பூல் வெளியேறியிருந்தது.

லிவர்பூலின் டர்வின் நுனேஸ், கேர்ட்டிஸ் ஜோன்ஸின் உதைகளை பரிஸ் ஸா ஜெர்மைனின் கோல் காப்பாளர் ஜல்லூயிஜி டொன்னருமா தடுக்க, பரிஸ் ஸா ஜெர்மைனின் வித்தின்ஹா, கொன்கலோ றாமோஸ், உஸ்மான் டெம்பிலி, டிஸயர் டூக்கோரே தமதுதைகளை உட்செலுத்தியிருந்தனர். லிவர்பூலின் மொஹமட் சாலா தனதுதையை உட்செலுத்தியிருந்தார்.

இதேவேளை சக புண்டெலிஸ்கா கழகமான பயெர் லெவர்குசனை வென்ற பயேர்ண் மியூனிச் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்ற மியூனிச், லெவர்குசனின் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்று 5-0 என்ற மொத்த கோல் கணக்கில் வென்றது. மியூனிச் சார்பாக ஹரி கேன், அல்போன்ஸோ டேவிஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## விளையாட்டு போட்டி

எம்.இஸட். ஷாஜகான்

நீர்கொழும்பு வெலிஹேன ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தின் 2025ஆம் ஆண்டுக்கான விளையாட்டு போட்டிகள், மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்றது.

விளையாட்டு விழாவில் இரு அணிகளுக்கு இடையில் கரப்பந்தாட்ட போட்டியும் நடத்தப்பட்டது. வெற்றி பெற்ற அணிக்கு பாடசாலை அதிபர் எம்.ஆர்.பிலீசியன் வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார்.







## யுனைட்டெட் செல்லும் கேன்?

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான ஹரி கேனை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் கைச்சாத்திட முயல்வதாகக் கூறப்படுகிறது. மியூனிச்சுடன் இன்னும் இரண்டாண்டுகள் ஒப்பந்தத்தை 31 வயதான கேன் கொண்டிருக்கின்றாரென்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:

## தென்னாபிரிக்காவை வென்ற மே. தீவுகள்



சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில், ரய்ப்பூரில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற தென்னாபிரிக்க மாஸ்டர்ஸ் அணியுடனான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

மே. தீவுகள்: 200/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: லென்டில் சிமொன்ஸ் 100 (59), சட்விக் வோல்டன் ஆ.இ 38 (12), பிரயன் லாரா 29 (34) ஓட்டங்கள். பந்துவீச்சு: கர்னெட் குரூகர் 2/14 [3.3])

தென்னாபிரிக்கா: 171/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜக் கலிஸ் 45 (36), ரிச்சர்ட் லெவி 44 (16), ஜக் ருடோல்ப் 39 (34), றயான் மக்லரென் 12 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரவி ராம்போல் 5/26 [4], சுலைமான் பென் 1/20 [3], டுவைன் ஸ்மித் 0/32 [4]) போட்டியின் நாயகன்: ரவி ராம்போல்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 13, மார்ச் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.